# முதலாம் தவணைப் பரீட்சை - 2017

# சைவசமயம்

165

| சுட்டெண் :........................... | தரம் : 09 | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(1) பிரணவப் பொருளாம் பெருந்தகை எனப்படுபவர்
1. சிவன் 2. சக்தி 3. விநாயகர் 4. முருகன்

(2) தேவ என்ற சொல்லின் பொருள் யாது?
1. தேவன் 2. இறைவன்
3. ஒளியுள்ள பொருள் 4. தூண்டுபவர்

(3) ஆலமர் செல்வன் எனப் போற்றப்படுபவர்
1. சிவபெருமான் 2. விநாயகர் 3. முருகன் 4. வீரபத்திரர்

(4) மனதை ஒருமுகப்படுத்தி ஆன்மா மேனிலை அடைய உதவும் வழிபாடு
1. வீட்டு வழிபாடு 2. பாடசாலை வழிபாடு
3. கூட்டு வழிபாடு 4. தியான வழிபாடு

(5) அறம் செய்ய விரும்பு என்று கூறியவர்
1. திருவள்ளுவர் 2. திருமூலர் 3. ஔவையார் 4. பாரதியார்

(6) எமது உடலில் இருந்து உயிர் நீங்கிய பின் செய்யப்படும் கிரியை
1. பூர்வக் கிரியை 2. அபரக் கிரியை 3. வீட்டுக் கிரியை 4. ஆயக் கிரியை

(7) கிரியை என்பதன் பொருள்
1. செயல் 2. கடமை 3. தொண்டு 4. தீட்சை

(8) புரட்டாதி மாதத்து அமாவாசை தொடங்கிய பூர்வபட்சமுள்ள காலம்
1. சிரார்த்தம் 2. ஏகோதிட்டம் 3. மகாளயம் 4. அத்தியேட்டி

(9) மகர சங்கிராந்தி என அழைக்கப்படும் பண்டிகை
1. ஆடிப் பிறப்பு 2. தைப்பொங்கல் 3. தீபாவளி 4. புதுவருடம்

(10) திருவிளக்கேற்றும்போது பாடப்படும் திருறைப் பாடல்
1. "அன்னம்பாலிக்கும்....". 2. "யாவர்க்குமாம்......"
3. "சிவ சிவ என்கிலர்....." 4. "இல்லக விளக்கது........"

(11) உலகத்தையும், உள்ளத்தையும் கடந்தவர் என்பதால் இறைவனுக்கு வழங்கப்படும் பெயர்
1. பசுபதி 2. கடவுள் 3. ஆண்டவன் 4. தலைவன்

(12) இறந்த தாயின் பொருட்டு அனுட்டிக்கும் விரதம்
1. பிரதோஷம் 2. ஆடி அமாவாசை
3. சித்திரா பௌர்ணமி 4. வெள்ளிவிரதம்

(13) சைவ சமயத்தின் அடிப்படையாக விளங்குவது
1. கிரியை 2. அன்பு 3. தியானம் 4. யோகம்



kalvi.lk

(14) அட்ட மூர்த்தங்களில் இயமானன் என்பது

1. சூரியன் 2. சந்திரன் 3. ஆன்மா 4. வானம்

(15) ஆதிரை நாள் காணாது போதியோ பூம்பாவாய் எனப் பாடியவர்

1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

(16) சிவபெருமான் லிங்கத்தில் தோன்றிய நாள்

1. தீபாவளி 2. சிவராத்தி 3. திருவாதிரை 4. திருவெம்பாவை

(17) "காதலாகிக் கசிந்து….." என்னும் பாடலின் பண்

1. காந்தாரபஞ்சமம் 2. கௌசிகம் 3. பழம்பஞ்சமம் 4. நட்டபாடை

(18) கோயிலுக்குச் சிறப்பையும், அழகையும் கொடுப்பது

1. தூய லிங்கம் 2. சுயம்புலிங்கம் 3. சிவலிங்கம் 4. பத்திரலிங்கம்

(19) பாடசாலையில் வளர்க்கப்படும் நற்பண்புகள்

1. சுத்தம் பேணுதல் 2. பணிவு 3. சகோதரத்துவம் 4. மேற்கூறிய யாவும்

(20) சிவராத்திரியின் நான்காம் சாமம் சாற்றப்படும் பட்டு

1. செம்பட்டு 2. மஞ்சள் பட்டு 3. வெண் பட்டு 4. நீலப் பட்டு

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

(1) பின்வரும் தேவாரங்களுள் இரண்டை எழுத்துப் பிழை இன்றி வரிக்கிரமமாக எழுதுக.

I. "துஞ்சலும் துஞ்சல் இலாத........"

II. "காதலாகி................."

III. "இல்லக விளக்கது....".

IV. "ஓசையொலியெல்லாம் ஆனாய்…………..."

(10x2=20 புள்ளிகள்)

(2) "இயற்கையில் இறைவனை வழிபடுவோம்."

I. இறைவன் இயற்கையில் பல்வேறு வடிவத்தைப் பெற்றுள்ளான் என்பதற்கான ஆதாரங்கள் மூன்று தருக?

II. அட்ட மூர்த்தங்களும் எவை?

III. இஸ்ட தெய்வ வழிபாடு என்பது யாது?

IV. குருபூசை தினங்கள் பாடசாலையில் கொண்டாடப்படுவதால் ஏற்படும் நன்மை யாது?

(3+2+2+3=10 புள்ளிகள்)

(3) மனித வாழ்வின் பிரதான இலட்சியம் அறத்தின்வழி வாழ்ந்து முத்தியடைதலாகும்.

I. அபரக் கிரியை என்பதன் பொருள் யாது?

II. அபரக் கிரியையின் வகைகள் எவை?

III. சிரார்த்தம் எப்போது செய்யப்படும்? அதன் நோக்கம் யாது?

IV. மகாளயம் அனுட்டிக்கும் காலம் யாது?

(2+3+3+2=10 புள்ளிகள்)



kalvi.lk

(4) "மனிதனை மனிதப் பண்புகளாக ஆக்குவது மனித விழுமியமே"

I. விழுமியம் என்ற சொல்லின் பொருள் யாது?

II. மனித விழுமியப் பண்பு 4 தருக?

III. நீர் பிறருக்குச் செய்த பிரதி உபகாரம் கருதாத உதவிகள் 2 தருக?

IV. நீர் பாடசாலையில் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ள உதவிய சந்தர்ப்பம் யாது?

(2+3+3+2=10 புள்ளிகள்)

(5) "மனித வாழ்வில் இலட்சியத்தை அடைவதற்குப் பண்டிகைகளும் விரதங்களும் உதவுகின்றன"

I. விரதம் என்றால் என்ன?

II. பண்டிகை என்றால் என்ன?

III. சித்திரை வருடப் பிறப்பன்று இடம்பெறும் விசேடமான நிகழ்வுகள் 4 தருக?

IV. சிவ விரதம் ஒன்றைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றைப் பற்றிய சிறப்பை எழுதுக?

(2+2+3+3=10 புள்ளிகள்)

(6) பின்வருவனவற்றுள் இரண்டுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

I. நவராத்திரி

II. சகிப்புத்தன்மை

III. திருக்கார்த்திகை விரதம்

IV. ஏகாதசி விரதம்

V. தைப்பொங்கல்

(5x2=10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

Follow and Get papers Daily ..!

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page